# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## OS.No.132/2014

Deposition of DW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 03.01.2023.

Evidence Recorded Time: 11.56 A.M to 12.25 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | உமாசங்கர் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | வெங்கடாஜலம் | **Calling** | : | முதுநிலை வருவாய் ஆய்வாளர், மேட்டூர். |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை தொடர்ச்சி :-**

சாட்சி இன்று ஆஜர் சாட்சி முன்பு 21.12.2022 அன்று சம்மனில் கண்ட ஆவணங்களை கொண்டு வந்திருந்தார். அதில் ஒரு ஆவணம் ஆனது தாசில்தாரின் முத்திரை இல்லாததால் குறியீடு செய்யப்படேவில்லை. தற்போது அந்த பட்டா மாறுதல் உத்தரவு தாசில்தார் முத்திரை பெறப்பட்டு சாட்சி இன்று ஒப்படைத்துள்ளதால் இருதரப்பு ஒப்புதலின் பேரில் பட்டா மாறுதல் உத்தரவு சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**(1 முதல் 3 மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

என்னிடம் காட்டப்பட்ட ஆவணங்கள் தான் பட்டா மாறுதலுக்கான செயல் முறைகள் என்றால் சரிதான். பட்டா மாறுதலுக்காகன செயல் முறைகள் வா.சா.ஆ.18 ஆகும். (மேற்படி ஆவணமானது பிரதிவாதி தரப்பில் இந்த வாதியை பொறுத்தமட்டில் ஆவணம் அபேட் என்பதால் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது). பட்டா மாறுதலுக்கு மனுதாரர் விண்ணப்பத்தில் எந்த சர்வே எண்ணிற்கு பட்டா மாறுதல் கேட்டு மனு கொடுக்கிறாரோ அந்த சர்வே எண்ணிற்குதான் பட்டா மாறுதல் செய்யவேண்டும் என்றால் சரிதான். சர்வே எண்.546/2 என்ற எண்ணிற்கு கோசலை பட்டா மாறுதல் கேட்டு மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனுவில்

உயில்படி என்று கூறியுள்ளார். உயில் நகல் தாக்கல் செய்துள்ளார்கள். அதில் முதல் அயிட்ட சொத்தில் தார்சு வீடு கதவு எண்.2/69 மற்றும் கூரை வீட்டின் கதவு எண்.2/68 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் அயிட்டம் 2 சொத்தில் சேலம் ரிடி, கொளத்தூர் சப்ரிடி, சிங்கிரிபட்டி கிராமம், பட்டா எண்.31 பழைய சர்வே எண்.452/16 இதற்கு புதிய சர்வே எண்.544/10 புஞ்சை ெஹக்டேர் 0.56.0–க்கு பு.ஏ.1.38 செண்ட் உள்ளது என்றால் சரிதான். அதில் சக்குபந்திக்கு கீழ் இதன் மத்தியில் மேற்கண்ட பு.ஏ.1.38 செண்ட் நிலம் பூராவும் இந்த உயில் சாசனத்திற்கு சம்மந்தம் என்றால் சரிதான். மனுதாரரர் கொடுத்த மனுவில் சர்வே எண்.546/2 ல் உயில் படி உள்ள சொத்திற்கு பட்டா மாறுதல் செய்ய விண்ணப்பம் கொடுத்தார். அதன்படி சர்வே எண்.546/2 மற்றும் மேலே சொன்ன சர்வே எண்ணிற்கு தான் பட்டா மாறுதல் செய்யவேண்டும் என்றால் சரிதான். பட்டா மாறுதல் கோப்பில் கிராம நிர்வாக அதிகாரி கொடுத்த வாக்குமூலத்தில் மேற்படி இறந்த அமராவதி பெயரில் உள்ள சிங்கரிபட்டி கிராம சர்வே எண்.544/10 விஸ்தீரணம் 0.56.0 ஏர்ஸ் உழவடை விவசாய நிலம் என்பது கிராம கணக்குகளின் படி மாறன் மகன் மாரியப்பன் என்பவர் பெயரில் 544/10–ல் விஸ்தீரணம் 0.03.5 ஏர்ஸ் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த வாக்குமூலத்தில் சர்வே எண் தவறாகவும், விஸ்தீரணம் குறைவாகவும் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வருவாய் ஆய்வாளர் வாக்குமூலத்தில் புல எண் மற்றும் விஸ்தீரணம் மாறுப்பட்டுள்ளது என்று கூறியுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கோப்புகளில் உள்ள பட்டா எண்.31 –ல் தாண்டவன் மனைவி அமராவதி பெயர் நீக்கம் செய்யப்பட்டு மாறன் மகன் மாரியப்பன் என்று உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண்.544/10 விஸ்தீரணம் 0.03.5 ஏர்ஸ் என்றால் சரிதான். சர்வே எண்.544/10 ஆனது உயிலில் இரண்டாவது அயிட்ட சொத்தாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டாமாறுதல் உத்தரவில் வீடு மற்றும் நிலத்திற்கும் சேர்த்துதான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவில் சா.சா.ஆ.3–ல் கிரையம் கொடுத்தவர் தாண்வன் மனைவி அமராவதி என்றும் கிரையம் பெற்றவர் மாரியப்பன் மனைவி கோசலை என்றும் தான் காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த பட்டா மாறுதல் உத்தரவில் சிங்கிரிபட்டி கிராமம் புல எண்.546/6, பரப்பு 0.40.0 ஏர்ஸ் என்றும் பட்டா எண்.911 என்றும் உள்ளது என்றால் சரிதான். உயிலில் சர்வே எண்.544/10 என்றும் பரப்பு 0.56.0 ஏர்ஸ் என்று

தான் உள்ளது என்றால் சரிதான். பட்டா மாறுதல் செய்ய கொடுக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில்தான் பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வேறு ஆவணங்கள் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரர் கொடுத்த விண்ணப்பத்திற்கும், அவர் தாக்கல் செய்த உயிலுக்கும், நாங்கள் பட்டா மாறுதல் செய்துள்ள சர்வே எண், விஸ்தீரணம் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.